RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2166

# சிறுதெய்வ வழிப்பாட்டில் மக்கள் - நம்பிக்கைகள்

**க. மகாலட்சுமி [அ, *], இ. சகாயமேரி [அ]**

[அ] உயராய்வு மையம், ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), திருநெல்வேலி-627008, தமிழ்நாடு, இந்தியா.

# People's Belief in Idol Worship

**G. Mahalakshmi [a, *], I. Sahayamary [a]**

[a] Rani Anna Government College for Women, (Affiliated to Manonmaniam Sundaranar University) Tirunelveli-627008, Tamil Nadu, India

* Corresponding Author: subbulakshmisri1968@gmail.com

Received: 30-08-2022
Revised: 18-10-2022
Accepted: 28-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

Every people have a faith that the ups and downs they face in their life is because of God. People who worship idols belief that the reason for a particular event in their life is the work of the deities they worship, which are announced in advance through different objects. Before doing an event in their life they worship the deities. This article examines Professor Ganapathiraman's view about the worship of idol in Tirunelveli district.

**Keywords:** Worship, Idol, Deities, Ganapathiraman

## முன்னுரை

மக்கள் தங்களின் வாழ்க்கையில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் காரணமாய் அமைவது தாங்கள் வணங்கும் தெய்வங்களின் அருட்செயலேயாகும் என்பதில் முழுமையாகக் நம்பிக்கையேக் கொண்டுள்ளனர். தங்களின் வாழ்க்கையில் உயர்வு - தாழ்வுகளைத் தாங்கள் வாயிலாக தெய்வங்கள் வெவ்வேறு பொருட்களின் வாயிலாக முன்னரே அறிவித்து விடுவதாக சிறுதெய்வ வழிபாட்டு மக்களாகிய நாட்டார் நம்பிக்கையோடு செயல்படுகின்றனர்.

இவர்கள் தங்கள் வாழ்க்கையில் நிகழும் ஒவ்வொரு நிகழ்வுக்கும் தெய்வத்தை முன்வைத்து வழிபட்டு வருகின்றனர். நாட்டார் வாழ்வியல் குறித்த நம்பிக்கைகளில் பேராசியர் கணபதிராமன் அவர்களின் திருநெல்வேலி பகுதியில் சிறுதெய்வ வழிபாட்டு முறைகளில் நம்பிக்கைகள் குறித்து ஆராயும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

## நம்பிக்கைகள்

நாட்டுப்புறவியல் என்பது நம்பிக்கைகள், பழக்கவழங்கங்கள் ஆகியவற்றால் பாதுக்கப்படும் ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாடாகும் (Sakthivel, 1983). மனிதனின் வாழ்க்கையில் பண்பாட்டினைக் குறிப்பிடும்பொழுது இவற்றில் சடங்கள், நம்பிக்கைகள், பழக்கவழங்கள் என்று எல்லாம் காணப்படுகிறது. பழக்கவழங்ககளும் நம்பிக்கைகளும் சமுதாயத்தின் அடிப்படைத் தேவைகளாகவும் காணப்படுகிறது. மேலும், இவைகள் பண்பாட்டு வளர்ச்சியின் படிக்கட்டுகளாகவும் அமைந்துள்ளது.

நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு அம்மக்கள் சமுதாயத்தில் பாதுக்காக்கப்பட்டும் வருகின்றது. இம்மக்களின் நம்பிக்கைகள் பல பொருட்களின் மீது பலவிதமாக அமைந்து காணப்படுகின்றது.

## மரம் பற்றிய நம்பிக்கைகள்

ஓரறிவு படைத்த உயிரினமான மரங்களைத் திருநெல்வேலிப் பகுதி மக்கள் இன்றும் தெய்வமாகப் போற்றி வழிபாட்டு வருகின்றனர். வேம்பினைத் தெய்வமாகக் கருதி வணங்கும் திறம் திருநெல்வேலி பகுதியில் உண்டு. திருநெல்வேலி பகுதியிலுள்ள கருங்குளம் வைகுண்டநாதர் கோவிலில் "சந்தனமரம்" கடவுளாக வணங்கப்படுகிறது. திருவைகுண்டத்தில் "அரசாழ்வார்" கோவில் திருநெல்வேலி பகுதியிலுள்ள திருக்குற்றாலத்தின் தல விருட்சமான "குறும்பலாவினை" திருஞானசம்பந்தப் பெருமான் பாடிச் சிறப்பித்துள்ளார்.

"தலைவன் மதியங் கதிர்விரியத் தன்புனலைத் தாங்கித் தேவி

முலைபாகங் காதலித்த மூர்த்தியிடம் போலும் முதுவே சூழ்ந்த

மலைவாய அம்பு பசும்பொன் கொழித்தழிபு மல்குசாரல்

குலைவாழைத் தீங்கனியும் மாங்கனியும் மரம் தென் பிலிற்றும் - குரும்பாலவே" என்ற பாடலின் மூலம் மரம் பற்றிய நம்பிக்கை வெளிப்படுகின்றது (Thirunanasambanthar, 1949).

திருநெல்வேலிப் பகுதியின் வயல்களின் வரப்புக்களில் வேம்பினை நட்டு வயலுக்குக் காவலாகக் கொண்டு அதனை வழிபட்டு வருகின்றனர். வேம்பு வரப்புகளில் வளரும்போது விளைகின்ற பொருட்களுக்கு காவலாக இருக்கும் என்பதும் மக்களின் நம்பிக்கை. வேம்பின் அடிப்பகுதியில் சிறிது சுண்ணாம்புத் தண்ணீரைத் தெளித்து மாலையணிவித்துத் தங்கள் வயலையும் விளைபொருட்களையும் காக்க வேண்டும் என்று மக்கள் வணங்குகின்றனர்.

வேங்கை மரத்திலுறையும் கடவுளை வயலைக் காக்கும் கடவுளாக பழங்காலத்தில் மக்கள் நம்பி வந்தனர் என்ற கருத்தும் குறிப்பிடத்தக்கது. இதனை நற்றிணையில்,

"எரிமருள் வேங்கை கடவுள் காக்குங்

குறுகார் கழனி" (Balasubramaniyan, 2004)

என்று குறிக்கப்பட்டுள்ளது.

## பல்லி எழுப்பும் ஒலி குறித்த நம்பிக்கைகள்

ஓரறிவு படைத்த மரங்கள் வாயிலாக தெய்வங்கள் தங்களுக்குள் வரும் இன்ப - துன்பங்களை அறிவிக்கின்றன என்று நம்பும் மக்கள் ஊர்வன, பறப்பன போன்ற உயிரனங்களும் அறிவிக்கின்றன என்று நம்புகின்றனர்.

பல்லியின் சொல்லைக் கேட்டு பலன்களை அறிய முடியும் என்பது திருநெல்வேலி பகுதி மக்கள் நம்பிக்கை. திருநெல்வேலிப் பகுதியிலுள்ள ஆறுமுக மங்களம் என்னும் ஊரிலுள்ள சுடலைமாடன் கோவிலில் பல்லி சொல்லும் பலனைக் கேட்க மக்கள் திரளாகச் செல்கின்றனர். இக்கோவிலில் பூசாரி குறைகளைக் கூற மக்களிடம் அவற்றை தெரிந்து, சுடலைமாடனிடம் "மகராஜா இன்ன ஊரிலிருந்து இன்னார் இன்ன குறை தீருமா ? தீராதா? என்று உத்தரவு கேட்க வந்துருக்கிறார். தீரும் என்றால் வலப்பக்கம் உத்தரவு ஆகவேண்டும் என்று விண்ணப்பம் செய்வார். சிறுது நேரத்தில் பல்லி வலப்பக்கம் அடித்தால் குறை நீங்கும், இடதுப்பக்கம் அடித்தால் குறைகாலம் தாழ்த்தி நீங்கும் என்றும் நம்பிக்கையோடு கூறுகின்றார். இதனை மக்களும் நம்பிக்கையுடன் ஏற்று கடவுளை வணங்கிச் செல்கின்றனர்.

## பாம்பு பற்றிய நம்பிக்கைகள்

பள்ளியின் சத்தத்தைக் கேட்டு பலன் அறியும் நம்பிக்கை போன்று. பாம்பின் இயக்கங்களைக் கொண்டு பலன்களை அறிந்து நம்பும் பண்பும் திருநெல்வேலிப் பகுதி மக்களிடம் உண்டு. பாம்பினை தெய்வமாக நம்பி வழிபடும் தன்மையும் இம்மக்களிடம் காணப்படுகிறது.

பெண்கள் தங்களுக்கு மகப்பேறு வாய்க்க வேண்டும் என்றும் கல்லில் பாம்பின் உருவம் செதுக்கி, அதனை அரச மரத்தடியில் எழுந்தருளச் செய்து வணங்கி வருகின்றனர். பாம்பு உமிழ்ந்து வைக்கும் மணி கிடைத்தால் நலன்கள் அனைத்தும் பெறலாம் என்பதும் மக்களின் நம்பிக்கையாகும்.

பாம்பு பச்சிலைக்கும் மந்திரத்திற்கும் கட்டுப்படும் என்ற நம்பிக்கை திருநெல்வேலிப் பகுதி மக்களிடம் உண்டு. சிறியாநங்கை, பெரியாநங்கை, சர்ப்பகந்தி போன்ற பச்சிளைகளுக்கு பாம்பு கட்டுப்படும் என்று மக்கள் நம்புகின்றார்கள். மந்திரத்திற்கும், திருநீற்றிற்கும் பாம்பு கட்டுப்படும் என்பதை நாலடியார் குறிப்பிடுகின்றார்.

பாம்பினைக் கோமதி என்றும், ''ஆவுடையம்மா'' என்றும், மாரியம்மா'' என்றும் குறிப்பிடுகின்றனர். மாரியின் மடியிலும் பாம்பு விளையாடும் என்று மக்கள் நம்பிக்கையோடு வணங்குகின்றனர். இதனை மாரியம்மன் வில்லுப்பாட்டு

"மார்மேல் நாகம்மா மடிமேல் புரண்டிடத்

தோள்மேல் நாகம்மா தொடைமேல் புரண்டிட

மார்மேலும் தோள்மேலும் வண்ணமுடி மேலும்

கொஞ்சி விளையாடுதம்மா கோபாலன் தங்கையரே"

என்று இப்பாடல் குறிப்பிடுகிறது (Alagappan, 1980).

## நேர்த்திக்கடன் பற்றிய நம்பிக்கைகள்

கோவில்களுக்கு நேர்த்திக்கடனுக்காக விடப்பட்டிருக்கும் எருமை, பன்றி, ஆடு, சேவல் போன்றவற்றை மக்கள் அந்தந்த தெய்வங்களாகவே நம்புகின்றனர். இவைகளை தொட்டுக் கும்பிடவும் செய்கிறார்கள் மக்கள்.

கங்கைகொண்டான் ஆயிரத்தம்மன் கோவிலுக்கு நேர்த்திக் கடனுக்காக இடப்பட்டிருக்கும் எருமையினை மக்கள் ஆயிரத்தம்மன் என்றே நம்பி வணங்குகின்றனர். கோவிலுக்கென விடப்பெற்ற இவ்வெருமையினை விளை நிலங்களில் மேய்ந்தாலும் விளைச்சல் பெருகும் எனவும் நம்புகின்றனர். வீதிகளில் உலாவும் இந்த விலங்குகள் யாருக்கும் எத்தீங்கும் செய்யாது கடைகளில் இருக்கும் கனிகளையும் காய்களையும் இது உண்ணுமாயின் கடைகளில் வணிகம் சிறப்பான முறையில் நடைபெறும் என்பதும் மக்களின் நம்பிக்கையாகும்.

## முளைப்பாரி குறித்த நம்பிக்கைகள்

திருவிழாக் காலங்களில் தாய்த் தெய்வக் கோவில்களின் கொடைக் காலங்களில் தாய்மார்கள் "முளைப்பாரி" எடுப்பார்கள். நோன்பு இருந்து தாய்மார்களால் எடுக்கப்பெறும் முளைப்பாரி நன்கு செழித்து வளருமாயின் அந்த ஆண்டு விளைச்சல் சிறந்து செழிப்பாக இருக்கும் என்பதும் மக்களின் நம்பிக்கையாகும். முளைப்பாரி செழித்து வளராமல் இருந்தால் விளைச்சலும் செழிப்பு இருக்காது என்று மக்கள் நம்பிக்கைக் கொண்டுள்ளதாக ஆசிரியர் கணபதிராமன் குறிப்பிடுகின்றார். (Ganapathyraman, 1986).

## மஞ்சள்பால் பற்றிய நம்பிக்கைகள்

வேளாண்மை பெருக வேண்டும் என்று மட்டுமே தாய்த் தெய்வங்களை மக்கள் வேண்டுவதில்லை. நோய் நொடிகளும் தங்களை அணுகாமல் இருக்கவும் வேண்டுகின்றனர். கொடை நாட்களில் நோய், பேய்பிசாசு போன்ற தீயவைகள் ஊருக்குள் வராமலிருக்க ஊரின் நான்கு எல்லையிலும் மஞ்சள்பால் வைக்கின்றனர். மஞ்சள், வேப்பிலை, கடுகு, நீர் கலந்து அரைத்து நீரில் கரைத்து மண் கலயத்தில் ஊற்றிக் கலயத்தின் மீது வேப்பிலையைச் சொருகி கொடை நாளில் நடு யாமத்தில் ஊருக்குள் நான்கு எல்லையிலும் வைத்து விடுகின்றனர். இதனை ஊரைத் தாக்க வரும் தீய உயிர்களும் அம்மை போன்ற நோய்களும் பருகிவிட்டு ஊருக்குள் வராமல் போய்விடும் என்றும் இதனால் ஊருக்குத் தீங்கு எதுவும் நிகழாது என்றும் மக்கள் நம்புகின்றனர்.

## பெண்கள் தனியாக செல்லக் கூடாத நம்பிக்கைகள்

பூப்படைந்த பெண்களை சுடலை, முனி, கருப்பன் போன்ற ஆண் தெய்வக் கோவிலுக்கு தனியாகச் சென்ற பெண்களை தெய்வம் தொட்டுவிடும் என்று நம்புகின்றார்கள்.

காட்டு வழியில் பெண்கள் தனியாகச் செல்லும்போது தலையில் பூ வைத்துக் கொண்டு சென்றால், அப்பூவின் நறுமனத்திற்காகத் தெய்வம் பின்தொடரும் என்ற நம்பிக்கை மக்களிடம் உண்டு. இதனால் பூவினை பெண்கள் எச்சில்படுத்தித் தலையில் வைத்துக் கொண்டு செல்வர்.

எண்ணெய் நீராடிய பின்னர் இரவுப் பொழுதில் ஆடவரோ, பெண்டிரோ வெளியில் செல்லக்கூடாது என்றும் அவ்வாறு சென்றால் பேய் தொட்டுவிடும் என்றும் நம்புகின்றனர். இந்த நம்பிக்கை பழங்காலத்தில் இருந்தே தமிழகத்தில் இருந்து வருகிறது.

## முடிவுரை

ஓரறிவு படைத்த உயிர்கள் முதல் ஆறறிவு படைத்த மனிதர்கள் வரையுள்ள உயிர்ப் பொருட்களின் இயக்கங்களின் தொழிற்பாடுகளையும், சொற்களையும் தெய்வ வாக்குகளாகவே நம்பி வரும் மக்கள் சிற்சில உயிரில் பொருட்களின் சில நிலைகளையும் தெய்வ நிலைகளாக நம்பிகின்றனர். தங்களின் வாழ்வில் தீய நிகழ்வுகள் நடக்குமேயானால் அதையும் தெய்வங்கள் முன்னரே அறிவித்து விடும் எனவும் மக்கள் நம்பிக்கைக் கொண்டுள்ளனர். சிறு தெய்வங்களை நம்பி வாழும் மக்களிடையே பழைய தமிழ் பண்பாடுகளின் கூறுபாடுகள் இன்றும் நிலவி வருவது போற்றுதற்குரியதாகும். சிறு தெய்வ வழிபாட்டில் பழைய பண்புகளைப் பாதுகாத்து வரும் மரபு மிளிர்ந்து காணப்படுவது தனிச்சிறப்புடையதாக இருக்கின்றது.

## References


Alagappan, A. (1980) Nattuppurapadalkal, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India

Balasubramaniyan, K.V. (2004) Nattrinai, Tamil University, Thanjavur, India

Ganapathyraman, S. (1986) Thirunelveli Pakuthiyil Siru Theiva Valipadu, Thirumagal Noolagam, Thoothukudi, Chennai, India

Sakthivel, S. (1983) Nattuppura Nambikaikal, Manivasakar Pathippagam, Chennai, India

Thirunanasambanthar, (1949) Thirukurunthokai, Sri Kasi Madam, Thiruppanandal, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

### About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License